## வேலூர் மாமன்ற தீர்மானம் எண்.416, நாள்: 12.03.2025-ன் உண்மை நகல்

வேலூர் மாநகராட்சி உலக வங்கியின் உதவியால் தமிழ்நாடு காலநிலை தாங்கும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNCRUDP) P for R திட்டத்தினை மேம்படுத்திட CCAP (City Climate Action Plan) குழுவை அமைக்கவும், இக்குழுவில் 8 முதல் 12 உறுப்பினர்கள் வரை இருக்கலாம் எனவும், இதில் 50% பெண் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவிற்கு உறுப்பினராக Members from NGOs, Residential Welfare Associations, Elected Body Members, ULB Officials போன்றவர்கள் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டதற்கு. இம்மாமன்றம் தீர்மானம் எண்.271 நாள்:03.01.2025-ல் குழு அமைக்க அனுமதிக்கப்பட்டது. மேலும் இக்குழுவில் குறிப்பிட்டுள்ள வரிசை எண்.5 தவிர வரிசை எண். 1 முதல் 4 மற்றும் 6, 7 உறுப்பினர்களுக்கு பெயர் தெரிவு செய்து வழங்கிட மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. குழு உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | குழு உறுப்பினர்கள் விவரம் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1. | மண்டலம் - 1 மாமன்ற உறுப்பினர்கள் | 1 | 1 |
| 2. | மண்டலம் - 2 மாமன்ற உறுப்பினர்கள் | 1 | 1 |
| 3. | மண்டலம் - 3 மாமன்ற உறுப்பினர்கள் | 1 | 1 |
| 4. | மண்டலம் - 4 மாமன்ற உறுப்பினர்கள் | 1 | 1 |
| 5. | மாநகராட்சி அலுவலர் | 1 | 1 |
| 6. | அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் | - | 1 |
| 7. | குடியிருப்பு நல சங்கம் | 1 | - |
| | மொத்தம் | 12 உறுப்பினர்கள் | |

**அலுவலக குறிப்பு :-**

மேற்படி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வ.எண்.5-தவிர குழு உறுப்பினர்களை மாமன்றம் தேர்வு செய்யப்பட்டதை பெயர் தெரிவு செய்து வழங்கலாம்.

(ந.க.எண்.இ4/7999/2024)

**தீர்மானம் எண்:- 416**

**தீர்மானம்:-** அனுமதி வழங்கப்பட்டது. சம்மந்தப்பட்ட மண்டல தலைவர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் மாமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அரசு சார்பு தொண்டு நிறுவனம் மற்றும் குடியிருப்பு நல சங்கம் மேயர் வசம் மாநகராட்சி அலுவலர்கள் ஆலோசனை பெற்று நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

(ஒம்) A. சுஜாதா,
மேயர்
வேலூர் மாநகராட்சி.

//உண்மை நகல்//

14/3/25

கண்காணிப்பாளர்,
வேலூர் மாநகராட்சி.

14/03/25

வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு

பிறப்பிப்பவர் : திரு.இரா.லெட்சுமணன், பி.இ.,

ந.க.எண்.இ4/7999/2024 நாள் :18.06.2025

பொருள் : வேலூர் மாநகராட்சி – உலக வங்கியின் உதவியால் தமிழ்நாடு காலநிலை தாங்கும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNCRUDP) P for R திட்டத்தினை மேம்படுத்திட நிறுவன திறன் குறைந்தது 50% பெண் பிரதிநிதித்துவத்துடன் கூடிய CCAP குழு அமைத்து – உத்தரவிடுதல்.

பார்வை :
1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29916/2024/WB நாள் : 22.11.2024.
2. மாமன்ற தீர்மான எண்.416 நாள் : 12.03.2025.

******

ஆணை :

பார்வை 1-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, உலக வங்கியின் உதவியால் தமிழ்நாடு காலநிலை தாங்கும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNCRUDP) P for R திட்டத்தினை மேம்படுத்திட CCAP (City Climate Action Plan) குழுவை அமைக்கவும், இக்குழுவில் 8 முதல் 12 உறுப்பினர்கள் வரை இருக்கலாம் எனவும், இதில் 50% பெண் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழுவிற்கு உறுப்பினராக Members from NGOs, Residential Welfare Associations, Elected Body Members, ULB Officials போன்றவர்கள் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குழு 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி காலநிலை மாற்றங்கள், ULBS திட்டத்தில் காலநிலையை எதிர்க்கும் நடவடிக்கைகளின் தேவைகளுக்கு நகரத்திற்கான CCAP தயாரிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் அதை செயல்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பார்வை 2-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் சம்பந்தப்பட்ட மண்டல தலைவர்

மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் ஆண் 1 நபர் மற்றும் பெண் 1 நபர் மாமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பின்வரும் குழு உறுப்பினர்கள் நிர்ணயம் செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | குழு உறுப்பினர்கள் விவரம் | பதவி |
|---|---|---|
| 1. | திரு.கே.அன்பு | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -1 |
| 2. | திருமதி.ச.சரண்யா | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -1 |
| 3. | திரு.த.சக்கரவர்த்தி | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -2 |
| 4. | செல்வி.மம்தாகுமார் | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -2 |
| 5. | திரு.ஜெ.விஜயகுமார் | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -3 |
| 6. | திருநங்கை.ரா.கங்கா | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -3 |
| 7. | திரு.கா.சு.சண்முகம் | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -4 |
| 8. | திருமதி.கே.காஞ்சினா கிருஷ்ணமூர்த்தி | மாமன்ற உறுப்பினர், மண்டலம் -4 |
| 9. | திரு.எம். பத்பநாபன் | கண்காணிப்பாளர் |
| 10. | திருமதி.இ. தமிழரசி | கண்காணிப்பாளர் |
| 11. | திரு.எம்.அந்தோணி | ஆர்.எப்.பிளாக், சங்க தலைவர், குடியிருப்பு நல சங்கம். |
| 12. | திருமதி.சுதா | அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் |

ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி.

18/6/25

பெறுநர்,

TNCRUDP திட்ட உறுப்பினர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :
நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28.